நீதித்துறை நடுவர் எண் 2 நீதிமன்றம், திருப்பத்தூர், வேலூர் மாவட்டம்.

**சி.சி 186/2019**

**2022ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 17ம்** நாள் புதன்கிழமை அரசு தரப்பு சாட்சியாகிய **அ.சா. 11** வது நபரின் வாக்குமூலம், (1969ம் ஆண்டின் 54வது விதியின் 9வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு. எஸ். பூபதி, உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிராமணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர | சிநேகா | வயது: | 20 |
| த/பெ.(அ)க.பெ | நவீன்குமார் | தொழில்: | இல்லத்தரசி |
| ஊர் : | குரிசிலாப்பட்டு | சமயம்: | இந்து |
| வட்டம் : | திருப்பத்தூர் | சாதி: | |
| மாவட்டம : | திருப்பத்தூர் | | |

முதல் விசாரணை:

நான் குரிசிலாப்பட்டு கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். நான் இல்லத்தரசியாக உள்ளேன். விபத்தில் இறந்துபோன தமிழ்செல்வன் என்னுடைய அண்ணன். 05.08.2018ந் தேதி இருசக்கர வாகனத்தில் நிதிஷ்குமார் என்பவர் ஓட்ட எனது அண்ணன் பின்னால் அமர்ந்து கொண்டு பாப்பானூர்மேட்டில் உள்ள எனது பாட்டி வீட்டிற்கு சென்று திரும்பி வரும்போது அன்றயை தினம் காலை 9.45 மணிக்கு திருப்பத்தூர் டு ஆலங்காயம் சாலையில் பாப்பானூர் கூட்ரோடு அருகே லாரி மோதி விபத்து ஏற்பட்டுவிட்டது. நான் அந்த சமயம் வெளியில்இருந்தேன். போன் மூலம் தகவல் கேள்விப்பட்டு திருப்பத்தூர் அரசு மருத்துவமனைக்கு வந்து பார்த்தேன். எனது அண்ணனை மேல்சிகிச்சைக்காக வேலூர் கொண்டு செல்லும் வழியில் இறந்துவிட்டார். நிதிஷ்குமார் சம்பவ இடத்திலிருந்து ஆம்புலன்ஸில் கொண்டு வரும்போதே இறந்துவிட்டார். போலீஸார் என்னை விசாரித்தார்கள்.

எ.த.கு.வி:-

சம்பவத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். சம்பவம் யாருடைய கவனக்குறைவாலும், அஜாக்கிரதையாலும் நேரடையாக தெரியாது என்றால் சரிதான். என்னுடைய அண்ணனின் பிரேதத்தை பெற்றுக்கொள்வதற்காக போலீஸார் என்னிடம் கையெழுத்து கேட்டதற்காக போட்டேன் என்றால் சரிதான். அதற்காக நான் தற்போது சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான்.

ம.வி:- இல்லை.